
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 19, 2021

திங்கட்கிழமை ஜூலை 19, 2021 | ஒளி: 07 கதிர்: 51 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | விலை ரூ.10



தேர்தல், வாக்களிப்பு சட்ட மறுசீரமைப்பு;

## 155 முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

**முன்மொழிவுகள், யோசனைகள் சமர்ப்பிக்கும் காலம், 15ஆம் திகதியுடன் முடிவடைந்தது**

தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழுவுக்கு 155 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

21 அரசியல் கட்சிகள், பொதுமக்கள், சிவில் அமைப்புகளால் இந்த முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக, மேற்படி குழுவின் செயலாளரும், பாராளுமன்ற பணியாட்தொகுதி பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான விசேட பாராளுமன்ற குழுவுக்கு,

தொடர்ச்சி P2

பருத்தித்துறை கொத்தணி

# தப்பியோருக்கு வலை

**புத்தளம், காத்தான்குடி மீது கழுகுப் பார்வை**

**தனிமைப்படுத்தலை மீறிய குற்றத்துக்கு சிறையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும்**

**பி.சி.ஆர் மாதிரிகளை வழங்கியிருந்த நிலையில், சொந்த ஊர் ஓடினர்**

■ என்.ராஜ், ரொமேஷ் மதுசங்க

பருத்தித்துறை கொத்தணி கட்டுக்கடங்காமல் போகக்கூடுமென எச்சரித்துள்ள சுகாதாரத் துறையினர், இன்னும் விழிப்பாக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

பருத்தித்துறை நகர் வர்த்தகத் தொகுதியில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 6 வர்த்தகர்கள் தலைமறைவாகிவிட்டனர். அவர்களுடன் பணியாற்றிய 70 பேரும் காணாமல் போயுள்ளனர்.

அவர்கள் சமூகத்தில் நடமாடுவதால் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்குமென சுகாதாரத் துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2




## துமிந்த சில்வாவுக்கு தலைவர் ஆசனம்



ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட துமிந்த சில்வா, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் குறித்த பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான கடிதம், கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளரான கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்தனவுக்கு ஜனாதிபதியின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2




தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும்

## இரு மாதங்களுக்கு ரூ.15,000 கோரிக்கை

தனியார் பஸ் ஊழியர்களுக்கு இரண்டு மாதங்கள் 15,000 ரூபாய் சம்பளம் வழங்குமாறு, அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நிலையை அடுத்து, சுமார் ஒரு வருட காலமாக தனியார் பஸ் சேவையில் ஈடுபட்டுள்ள சுமார் 60,000 பேர் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வருவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

சமையலறையில் ஹெரோய்ன்

## ஆட்டுப்பட்டித்தெருவில் இளம் தம்பதி கைது



கொழும்பு, ஆட்டுப்பட்டித்தெருவில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

13 கோடி ரூபாய் பெறுமதியான 13 கிலோ கிராம் ஹெரோய்னுடன் இந்தச் சந்தேகநபர்கள், நேற்று முன்தினம் (17) கைதுசெய்யப்பட்டுள்ளனர்

தொடர்ச்சி P2

## 'மேதகு' வை பதிவிறக்கி விற்ற ஆவாஎலிய இளைஞர்கள் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் எழுச்சி பற்றிப் பேசும் 'மேதகு' என்ற அண்மையில் வெளியான இந்தியத் திரைப்படத்தை, இணையத்தளம் ஊடாகப் பதிவிறக்கம் செய்து, அதனை விற்பனை செய்து வந்த இளைஞர்கள் இருவர், நுவரெலியா பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் (17) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆவாஎலிய பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

இலண்டனிலிருந்து

## நாடு திரும்பிய வைத்தியர் மரணம்

■ எம்.றொசாந்த்

இலண்டனில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பிய நிலையில் மாரடைப்பு காரணமாக உயிரிழந்த வைத்தியர் ஒருவருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அச்சுவேலி, தோப்பு பகுதியைச் சேர்ந்த சிற்றப்பலம் இராசலிங்கம் (வயது-80) என்பவரே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இவர், இலண்டனில் இருந்து கடந்த ஜூன் 29ஆம் திகதி அச்சுவேலி திரும்பிய நிலையில், மாரடைப்பு காரணமாக, கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் உயிரிழந்துள்ளார். அவர், அச்சுவேலி வைத்தியசாலையின் முன்னாள் அத்தியட்சகர் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

வீட்டுக்குள் பணக்குழி

## 'ரன்மல்லி'யின் மைத்துநர் கைது



கொட்டாவ, பன்னிபிட்டிய, கிரிபிட்டிய பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் வளவில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கோடி 39 இலட்சம் ரூபாய் பணம் விசேட பொலிஸ் அதிகாரிகளால் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (18) தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தெற்கு கடல்பகுதி ஊடாக இலங்கைக்குக் கடத்தப்பட்ட 298 கிலோ கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## 2,250 கர்ப்பிணிகளுக்கு கொரோனா தொற்று



நாட்டில் இதுவரை 2,250 கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 13 கர்ப்பிணித் தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் குடும்ப நல சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே, கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக சிகிச்சை பெறுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பைஸர், மொடர்னா ஆகிய தடுப்பூசிகளை வழங்குவது குறித்து ஆராயுமாறு, குடும்ப நல சுகாதார பணியகம்,

தொடர்ச்சி P2

20 தொழிற்சங்கங்களை இணைத்து

## கொழும்பில் வியாழன் பாரிய போராட்டம்

அதிபர், ஆசிரியர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொள்ளும் நோக்கில், 20 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து, எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் பாரிய போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

நிகழ்நிலை கற்பித்தலில் இருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளமைக்கு அப்பாற்பட்டதாக இப்போராட்டம் காணப்படுமெனவும் மாணவர்களின் கல்விக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கம் எமக்குக் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில், அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கல்விச் சேவையில் நடைமுறையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது. பல வருடகாலமாக ஆசிரியர்கள் சம்பளம்

தொடர்ச்சி P2



அதிரடிப்படையினர் சூட்டதில்

## 6 படுகொலைகளுடன் தொடர்புடைய 'பிந்து' பலி

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த லலித் வசந்த பிந்து என்ற நபர், விசேட அதிரடிப்படையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தின் சீதுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (17) இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 44 வயதுடைய குறித்த சந்தேகநபர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (18) தெரிவித்தார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், தமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய சந்தேகத்துக்கு இடமான

தொடர்ச்சி P2



மலையகத்தில் புதிய கூட்டணி

## 12 தொழிற்சங்கங்கள் இணைய இணக்கம்

■ எஸ்.கணேசன்

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ஓரணியில் திரண்டு எதிர்க்கும் நோக்கத்துடன், தேசிய பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனம் எனும் கூட்டணியை உருவாக்குவதற்கு, மலையகத்தை மையமாகக் கொண்டு இயங்கும் பிரதான தொழிற்சங்கங்கள் இணக்கம் வெளியிட்டுள்ளன.

இணையவழி ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி உட்பட மலையகத்தில் செயற்படும் 12 தொழிற்சங்கங்கள் விருப்பத்தை வெளியிட்டதாக மலையக மக்கள் முன்னணியி

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## 155 முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை சமர்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த காலம், ஜுலை 15ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இதற்கமைய, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, மௌபிம ஜனதா கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (உடுநுவர கிளை), ஜனநாயக இடதுசாரி முன்னணி, லிபரல் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஜனநாயக ஐக்கிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் மகாசபை, ஐக்கிய சமாதான முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் சமூக ஜனநாயகக் கட்சி, ஜனநாயகக் கூட்டணி, சிங்களதீப ஜாதிக பெரமுன, இலங்கை சமசமாஜக் கட்சி, சமத்துவக் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன.

**விசேட குழுவின் அடுத்த அமர்வு, எதிர்வரும் 28ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள், குறித்த விசேட பாராளுமன்றக் குழுவின் எதிர்காலக் கூட்டங்களில் ஆராயப்படவுள்ளன.

அதேநேரம், கடந்த 14ஆம் திகதி விசேட குழுவின் முன்னிலையில் ஆஜராகியிருந்த இந்நாட்டின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ஃரல் அமைப்பு, தமது யோசனைகளை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

விசேட குழுவின் அடுத்த அமர்வு, எதிர்வரும் 28ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

# தப்பியோருக்கு வலை

பருத்தித்துறை நகரில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட இந்த 6 வர்த்தகர்களும் புத்தளம், காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

பருத்தித்துறை நகர் வர்த்தகத் தொகுதியில் 23 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில், 7 வர்த்தகர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை, வெள்ளிக்கிழமை (16) உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து, தொற்றாளர்களை அடையாளம் கண்டு, கொரோனா இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பும் பணியில், சுகாதாரத் துறையினர் ஈடுபட்ட போது, அதில் 6 வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

அவர்கள் 6 பேரும் பி.சி.ஆர் மாதிரிகளை வழங்கியிருந்த நிலையில், தமது சொந்த ஊரான புத்தளம், காத்தான்குடிக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், அவர்களுடன் பணியாற்றியவர்களை சுயதனிமைப்படுத்தச் சென்ற போது, அவர்களும் தலைமறைவாகியுள்ளனர்.

அவ்வாறு சுயதனிமைப்படுத்துவதற்காக 70 பேரின் விவரங்களுடன் சுகாதாரத் துறையினர், பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றத்துக்கு குறைந்தது ஓர் ஆண்டு சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாடு திரும்பிய வைத்தியர் மரணம்

அவரது சடலம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகளில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில், கொரோனா தொற்றுள்ளதாக நேற்று முன்தினம் (17) இரவு அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதனால் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் அவரது சடலம், சுகாதார நடைமுறைகளின் கீழ் மின்தகனம் செய்யப்படவுள்ளது.

## ஆட்டுப்பட்டித்தெருவில் இளம் தம்பதி கைது

என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (18) தெரிவித்தார்.

ஆட்டுப்பட்டித்தெருவில் உள்ள சிறிய வீடொன்றின் சமயலறையில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில், குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், வீட்டில் இருந்த பெண் மற்றும் அவரது கணவன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர் என அவர் கூறினார்.

இந்தியாவுக்கு தப்பிச்சென்றுள்ள சுரேஷ் என்பவரே இந்தப் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

அத்துடன், போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும்

**சிறிய வீடொன்றின் சமயலறையில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில், போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், வீட்டில் இருந்த கணவனும் மனைவியும் கைதுசெய்யப்பட்டனர்**

சுரேஷ் என்பவர், நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சம்பவங்களுடன் தொடர்புடையவரும் தற்போது இந்தியாவுக்குத் தப்பிச்சென்று இருப்பவருமான போதைப்பொருள் வர்த்தகர் 'கிம்புலா எலே குணா'என்பவரின் சகோதரர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், போதைப்பொருள் ஒழிப்பு விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் கூறினார்.

## கொழும்பில் வியாழன் பாரிய போராட்டம்

உள்ளிட்ட பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். நிகழ்நிலை கற்றல் முறைமையை கல்வி அமைச்சின் திட்டம் எனக் குறிப்பிட முடியாது.

"இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காகவே ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுப்பட்டோம். அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கைது செய்யப்பட்டு, பலவந்தமான முறையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தோம்.

"அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கு எதிராக ஆசிரியர்கள் முன்னெடுத்த தொடர் போராட்டத்தால் அரசாங்கம் அடிபணிந்துள்ளது.

"தனிமைப்படுத்தல் முகாம்களில் இருந்து வெளியேறியுள்ளதால் போராட்டத்தைக் கைவிட்டு விட்டோம் என்பது அர்த்தமல்ல. எமது போராட்டங்களை நிகழ்நிலை கற்பித்தலில் இருந்து விலகியுள்ளமைக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது" என்றார்.

## 12 தொழிற்சங்கங்கள் இணைய இணக்கம்

பொதுச் செயலாளர் பேராசிரியர் விஜயசந்திரன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர், தொழிலாளர்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

"மறுபுறத்தில் தோட்டப்பகுதிகளில் மலையகத் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு கம்பனிகள் முற்படுகின்றன. இது பயங்கரமானதொரு நிலையாகும். தொழிற்சங்கக் கட்டமைப்பு சிதைக்கப்பட்டால், தொழிலாளர்கள் உதிரிகளாக்கப்படுவார்கள். ஒற்றுமை சிதைக்கப்படும். அடக்குமுறை தலைதூக்கும்.

"எனவே, இதன் அடிப்படையில் தேசிய பெருந்தோட்டத் தொழிற்சங்க சம்மேளனமொன்றை உருவாக்கி, வழிகாட்டல் குழுவை அமைத்து, அதன் ஊடாக இவ்விடயங்களை கையாளள வேண்டுமென இணக்கம் காணப்பட்டுள்ளது.

"தொழிலாளர் நலன்சார் விடயத்தில் கட்சி, தொழிற்சங்க பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைவதற்கு தொழிற்சங்கங்கள் ஆதரவை தெரிவித்துள்ளன. எனவே, சட்டம் மற்றும் அரசியல் ரீதியில் வெவ்வாறாக அன்றி ஒன்றாக அழுத்தம் கொடுக்கக்கூடிய சூழல் இதன்மூலம் உருவாகும்" என்றார்.

## துமிந்த சில்வாவுக்கு தலைவர் ஆசனம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை வழக்கில், குற்றவாளியாக இனங்காணப்பட்ட துமிந்த சில்வாவுக்கு, மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இருப்பினும், கடந்த மாதம் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் சமூக அமைப்புகள், சில அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பலரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் தேசிய வீட்மைப்பு அதிகாரசபையின் தலைவராக துமிந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## 2,250 கர்ப்பிணிகளுக்கு கொரோனா தொற்றியது

சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

## இரு மாதங்களுக்கு ரூ.15,000 கோரிக்கை

"இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று குறைந்தது இரண்டு மாதங்களுக்காவது தனியார் பஸ் ஊழியர்களுக்கு 15,000 ரூபாய் மாத உதவித்தொகையை அரசாங்கத்திடம் கோரியுள்ளோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## 'மேதகு' வை பதிவிறக்கி விற்ற ஆவாஎலிய இளைஞர்கள் கைது

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிட கட்டடத் தொகுதியில் வர்த்தக நிலையமொன்றை நடத்திச் செல்லும் நபரும் அவரது உதவியாளருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களால் பதவிறக்கப்பட்ட 'மேதகு' படத்தை, பென் ட்ரைவில் போட்டு, 50 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வீடியோக்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே, இவ்விரு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## 'ரன்மல்லி'யின் மைத்துநர் கைது

அத்துடன், தற்போது டுபாயில் தங்கியிருக்கலாம் என நம்பப்படும் போதைப்பொருள் கடத்தல்காரரான, ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நதுன் சிந்தன என்பவரால் குறித்த போதைப்பொருள் அனுப்பப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது.

அத்துடன், அவரது நெருங்கிய உதவியாளரான சரித் சந்தகெலும் எனும் ரன்மல்லி என்பவருக்கும் இந்தக் கடத்தலில் தொடர்பு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் கொண்டிருந்தனர்.

அதனையடுத்து, ரன்மல்லி தொடர்பிலும் அவரது நடவடிக்கை பற்றியும் பொலிஸார் கண்காணித்த நிலையில், ரன்மல்லியின் மனைவியின் சகோதரர், நேற்று முன்தினம் (17) இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தற்காலிகமாக தங்கியிருந்த பன்னிபிட்டிய பகுதியில் உள்ள வீட்டின் வளவில் உள்நாட்டு போதைப்பொருள் கொடுக்கல் - வாங்கல் நடவடிக்கைகளுக்கு கைமாற்றுவதற்காக குறித்த பணம் பாதுகாப்பான முறையில் பொதி செய்யப்பட்டு, புதைக்கப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சந்தேகநபர், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறினார்.

## 6 படுகொலைகளுடன் தொடர்புடைய 'பிந்து' பலி

கார் ஒன்றை பின் தொடர்ந்து சென்று சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உத்தரவை மீறி, அந்த அதிசொகுசு வாகனம் பேஸ்லைன் வீதியில் பயணித்த நிலையில், பலத்தைப் பிரயோகித்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காரில் இருந்த நபர் காயமடைந்த நிலையில், நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, உயிரிழந்துள்ள நபர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், 1991ஆம் ஆண்டு முதல் சீதுவை, மாத்தறை, கட்டுநாயக்க, அக்குரஸ்ஸ வத்தளை, ராகம உள்ளிட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற குற்றச்செயல்கள், 06 மனிதப் படுகொலைகள் மற்றும் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என தெரியவந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

அத்துடன், குறித்த நபருடன் மேலும் இருவர் அந்தக் காரில் பயணித்துள்ளதாக தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், சம்பவ இடத்தில் இருந்து மைக்ரோ ரக கைத் துப்பாக்கி ஒன்று விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் சீதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## குரங்குகள் நான்குக்கு கொரோனா தொற்று

தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் இரண்டு சிம்பன்சிகள் மற்றும் இரண்டு ஒராங்குட்டான்கள் ஆகியன கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளன.

இதுபோன்ற அறிக்கை கிடைத்தாலும், மேலதிக சோதனைகளுக்கு விலங்குகளை உட்படுத்தி அதை உறுதிப்படுத்துமாறு, மிருகக்காட்சிசாலையின் அதிகாரிகளைப் பணித்துள்ளதாக வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

இருப்பினும், நான்கு விலங்குகளும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக தகவல் கிடைத்ததாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.




அனைத்திலும்

## ஊழல் செய்கிறது அரசாங்கம்

தற்போதைய அரசாங்கம் அனைத்திலும் ஊழல் செய்வதாகக் குற்றஞ்சுமத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் விரைவில் சரிந்துவிழப் போவதாகவும் தெரிவித்தார்.



களுத்துறையில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே> அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், "தற்போதைய அரசாங்கம் எல்லாவற்றிலும் திருட்டு வேலைகளை செய்து வருகிறது. சீனி, தேங்காய் எண்ணெய், வீதிப் புனரமைப்பு என அனைத்து விடயங்களிலும் ஊழல் செய்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் சரிந்துள்ளது. நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதாரமும் விரைவில் சரிந்து விழப்போகிறது" எனவும் தெரிவித்தார்.

"கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் திரிபோஷவை வழங்க முடியாத அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் உள்ளது. நாட்டின் சொத்துகளைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம், நாட்டின் சொத்துகளை காட்டிக்கொடுக்கிறது" எனவும் கடுமையாக சாடினார்.

தடுப்பூசிகள் செலுத்துவது தொடர்பில்

## 'என்னிடம் எதுவும் கேட்பதில்லை'

கொரோனா வைரஸுக்கான தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் தொடர்பில் என்னிடம் எந்தவிதமானக் கருத்துகளை எவரும் கேட்கவில்லை என ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் வைரஸ் தொடர்பான விசேட நிபுணருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே, இராஜாங்க அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டபோது, என்னுடன் ஒரு மணித்தியாலங்கள் கலந்துரையாடி இருந்தார். இதன்போது மாத்திரமே தடுப்பூசிகள் தொடர்பில் ஆலோசனைகளை அவர் கேட்டிருந்தார்.

இதனைத் தவிர்ந்த ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் என்னிடம் ஆலோசனைகள் எதையும் அரசாங்கம் கேட்கவில்லை என்றார்.

# ‘டெல்டா தீவிரமடையும்’

## இராஜாங்க அமைச்சர் சன்ன எச்சரிக்கை

இந்தியாவில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வரும் கொரோனா தொற்றின் திரிபான டெல்டா தொற்று, எதிர்வரும் நாள்களில் இலங்கையில் தீவிரமாகப் பரவும் ஆபத்து உள்ளதெனத் தெரிவித்த மருந்து உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, உலகில் பல நாடுகளில் பல்வேறு திரிபுகள் பரவி வருவதாகவும் தெரிவித்தார்.



மேலும் உலக நாடுகள் அனைத்திலும் டெல்டா பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் நிலையில், அதிலிருந்து இலங்கையால் தப்பிக்க முடியாதென்றார்.

தற்போது இலங்கையில் செலுத்தப்படும் கொரோனா தடுப்பூசிகளான அஸ்ட்ராசெனிகா, பைசர், சினோஃபாம் ஆகிய தடுப்பூசிகள், டெல்டா தொற்றைக் கட்டுப்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளதென்றும் தெரிவித்த அமைச்சர், இந்தத் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களுக்கு டெல்டா தொற்றால் பாரிய அச்சுறுத்தல் ஏற்படாது என்றார்.

மேலும், தென்அமெரிக்காவின் பெரு நாட்டை மய்யப்படுத்தி உருவாகிய லெம்டா தொற்று, பல நாடுகளில் வேகமாகப் பரவி வரும் நிலையில், அமெரிக்காவின் கலிபோரினியாவை மய்யமாகக் கொண்டு, டிப்ஸ்சைலன் என்ற தொற்றும் பல நாடுகளில் பரவி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

### நாட்டைக் கட்டியெழுப்ப

# ‘அமைச்சர் பசிலால் முடியாது’



நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாதெனத் தெரிவிக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, பசில் என்ன மெஜிக்காரரா? எனவும் வினவியுள்ளார்.

களுத்துறை போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதியாக கோட்டாபய இருந்தாலும், நாட்டை நிர்வகிப்பது பசில் ராஜபக்ஷவே. அதேபோல, பிரதமராக மஹிந்த இருந்தாலும் பிரதமரின் செயற்பாடுகளை முன்னெடுப்பதும் அமைச்சர் பசில் எனவும் தெரிவித்தார்.

# நீர்வீழ்ச்சியில் விழுந்த யுவதி மாயம்

திம்புல்ல, பத்தன, டெவோன் நீர்வீழ்ச்சியின் உச்சியிலிருந்து கீழே விழுந்து யுவதியொருவர், நேற்று (18) காணாமற்போயுள்ளார் என்று பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

டெவோன் நீர்வீழ்ச்சியின் உச்சியைப் பார்க்க நான்கு யுவதிகள் வந்ததாகவும், நீர்வீழ்ச்சியின் உச்சியில் உள்ள தண்ணீரில் கால்களைக் கழுவச் சென்றபோது குறித்த யுவதி வழுக்கி விழுந்ததாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்

காணாமற்போனவர், தலவாக்கலை, லிந்துலை



பிரதேசத்தைச் சேர்ந்த பவித்ரா என்ற 19 வயது யுவதி என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

97 மீற்றர் உயரமான டெவோன் நீர்வீழ்ச்சியின் அடிப்பகுதி பாறை நிறைந்த இடம் என்றும், இந்த நாள்களில் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டம் மிக அதிகமாக உள்ளது என்றும் அப்பகுதியில் வசிப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

### வைத்தியசாலையிலிருந்து

# சிறைச்சாலைக்கு திரும்பினார் ரஞ்சன்

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிகிச்சையின் பின்னர் அங்குனகொலபலஸ்ஸ சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று, சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாருமான (நிர்வாக) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.


முழங்காலில் ஏற்பட்ட திடீர் காயம் காரணமாக, காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க அங்கு சிகிச்சை பெற்று வந்தார்.



தற்போது அவரது உடல்நிலை பூரணமாகக் குணமடைந்து உள்ளதாகத் தெரிவித்த சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர், மீண்டும் அவர் அங்குனகொ, லபலஸ்ஸ சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்றார்.

# மூன்று மீனவர்கள் கரை திரும்பவில்லை

■ ரஸீன் ரஸ்மின்



புத்தளம் கற்பிட்டி பகுதியிலிருந்து இயந்திரப் படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்கள் இதுவரை கரைதிரும்பவில்லை என குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இவர்கள், கடந்த வெள்ளிக்கிழமை (09) சென்ற நிலையில் 10 நாள்களாக எவ்விதத் தொடர்புகளும் இன்றி உள்ளதாக குடும்பத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

கற்பிட்டி, வன்னிமுந்தல் பகுதியைச் சேர்ந்த எம்.எஸ்.முஹம்மட் அலிகான் (வயது 26), முஹம்மட் நபீல் (வயது 45), கற்பிட்டி மணல்தோட்டம் பகுதியைச் சேர்ந்த நிசங்க (வயது 21) ஆகிய திருமணமான மூன்று மீனவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இது தொடர்பில் கற்பிட்டி பொலிஸ் நிலையத்திலும், கற்பிட்டி கடற்படை முகாமிலும் மீனவர்களின் குடும்பத்தினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். கற்பிட்டி மீனவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் உதவியுடன் மூன்று மீனவர்களையும் தேடி வருவதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

# ஆதிக்கம் செலுத்தும் திரிபாக டெல்டா மாறும்

கொரோனா வைரஸ் டெல்டா திரிபானது, அடுத்த சில நாள்களில் நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் திரிபாக மாறும் என்று இலங்கையின் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரசாங்கமும் பொதுமக்களும் நிலைமையின் தீவிரத்தை புரிந்து கொள்ளத் தவறினால் நாடு ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொள்ளும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார்.

இலங்கையை ஒரு சிறிய நாடாகப் புறக்கணிக்க முடியாது என்றும் டெல்டா திரிபு ஆதிக்கம் செலுத்தும் திரிபாக மாறினால், முந்தைய பாதிப்புகளை விட இலங்கை மோசமான சூழ்நிலையை எதிர்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

டெல்டா திரிபுடன் அடையாளம் காணப்பட்ட தினசரி கொரோனா தொற்றாளர்களை அறிவிக்க சுகாதார அதிகாரிகள் தவறிவிட்டதாகக் கூறிய அவர், இருப்பினும் இவை ஊடகங்களால் தெரிவிக்கப்படுவதாகவும் கூறினார்.


தினசரி அறிக்கையிடப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் செயற்கை வீழ்ச்சி காணப்பட்டாலும், தினமும் கொரோனா தொடர்பான இறப்புகள் குறையவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வழங்கப்பட்ட பல சுற்றறிக்கைகள் காரணமாக, பி.சி.ஆர் பரிசோதனைகளுக்குப் பதிலாக விரைவான அன்டிஜன் சோதனைகளை நடத்துவதே தொற்றாளர்களின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

# யாழுக்கு பிரதமர் விஜயம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இம்மாதம் 31ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத்திட்டத்துக்கு அமைய, 100 நகரங்களை பல்பரிமாண நகரமாக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், யாழ்.மாவட்டத்தின் சில பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.



இத்திட்டத்தின் கீழ், வேலணை, சாவகச்சேரி, கொடிகாமம், நாவற்குழி, நெல்லியடி, மருதனார்மடம் ஆகிய 6 பிரதேசங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இதில் முதற்கட்டமாக வேலணை, கொடிகாமம், நாவற்குழி, மருதனார்மடம் ஆகிய 4 பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கான திட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

# ‘தொல்பொருள் வளங்களை அரசாங்கம் விற்கிறது’

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த வளங்களை அரசாங்கம் விற்பனை செய்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் வெளிநாட்டினருக்கும் வணிகர்களுக்கும் விற்கப்பட்டதாகக் கூறப்பட்ட, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த சொத்துகளை மீளக் கொள்வனவு செய்வதாக உறுதியளித்தே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தனர்.

எவ்வாறாயினும், நிதி அமைச்சின் மூலம் செலாண்டிவா முதலீடுகளை



அரசாங்கம் நிறுவியதாகவும், கொழும்பிலுள்ள தொல்பொருள் மதிப்பு வாய்ந்த பல கட்டடங்களை விற்பனை செய்வது குறித்து நகர அபிவிருத்தி அதிகார சபை, விளம்பரங்களை வெளியிட்டுள்ளது. இந்த நோக்கத்துக்காக அதிகாரத்தை நாடியதா என்று தலதா எம்.பி,கேள்வியெழுப்பினார்.

# ‘எரிமலை’ பத்திரிகையின் ஆசிரியர் காலமானார்

‘எரிமலை’ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஏ.எஸ். எம். அபூபக்கர் சனி இரவு (ஜூலை 17) அக்கரைப்பற்றில் காலமானார். சிறுதுகாலம் சுகவீனமுற்றிருந்த இவர், இறக்கும் போது 88 வயதாகும்.

இவர் தினகரன், வீரகேசரி, தினபதி போன்ற பத்திரிகைகளின் ஆரம்பகால நிருபராவார். கிழக்கில் எந்தவொரு பத்திரிகைகளுமே வெளிவராத ஒரு காலகட்டத்தில் 1956ஆம் ஆண்டு தனது சொந்த முயற்சியின் காரணமாக ‘எரிமலை’ என்ற பத்திரிகையை ஆரம்பித்து, நடத்திவந்துள்ளார்.

### அத்தியாவசிய உணவுப் பொருள்களின்

# விலையை குறைப்பதே முதல் வேலை

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்களின் விலையைக் குறைப்பதே எனது முதலாவது செயற்பாடாக அமையும் எனத் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கு அனைத்து தரப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற பிரதானிகளுடன் அலரிமாளிகையில் நேற்று (18) இடம் பெற்ற சந்திப்பில் நிதியமைச்சர் இதனை



தெரிவித்துள்ளார்.

பல்வேறு எதிர்பார்ப்பிற்கு மத்தியில் மக்கள் ஆட்சியதிகாரத்தை கையளித்துள்ளதாக தெரிவித்த அவர், மூன்று வேளையும் உணவு பெற்றுக் கொள்ள வசதியில்லாத மக்கள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தும் என்றும் கூறியுள்ளார்.

ஆகவே அரிசி உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலையினை குறைப்பதற்கு அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ‘கல்வியை காலந்தாழ்த்த முடியாது’

ஒன்லைன் ஊடாக மாணவர்கள் முன்னெடுக்கும் கற்றல் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டால், மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்குப் பாரதூரமான அச்சுறுத்தல்கள் ஏற்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "ஒன்லைன் ஊடான



கற்கைகள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். வீதிகள், கட்டடங்கள் அமைப்பது காலந்தாழ்த்த முடிந்தாலும், கல்வியைக் காலந்தாழ்த்த முடியாது.

கல்வியைக் காலந்தாழ்த்துவதால், மாணவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும். எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றம் இன்று கூடுகிறது

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரு நாள் விவாதத்துக்காக பாராளுமன்றம் இன்றும் நாளையும் கூடவுள்ளது.

இரண்டு நாள்களும்



காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் சபை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

வாய்மூல விடைக்கான வினாக்கள் இன்றி முதல் நாளும், மறு நாள் காலை 10 மணியிலிருந்து 11 மணிவரையில் வாய்மூல விடைக்கான வினாக்களுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இருநாள் விவாதிக்கப்பட்டு, 20ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## வேலை வாய்ப்பு

கொரல் ட்ரோ கணணி அறிவு மற்றும் டைப்செடிங் இல் நன்கு தேர்ச்சிபெற்ற திறமையான கண்டிக்கு அருகில் வசிக்கும் ஆண்கள் / பெண்கள் தேவை

சிப்சயுரி வெளியீடுகள்
கண்டி

070 3144100 / 081 2237238

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கப்படுகின்ற அறிவித்தல்.

[illegible] (பீவீ) எல்டிடி
PV 00241136
இல. 220/8, [illegible]

[illegible] (பீவீ) எல்டிடி
PV 00212208
இல. 212/E/1, [illegible], கண்டி.

[illegible] (பிரைவட்) லிமிட்டட்
PV 00241209
இல. 80, [illegible]

கெபிட்டல் ஸ்ட்ரட்டிஜிக் ஹோல்டிங்ஸ் (பீவீ) எல்டிடி
PV 00241665
இல. 792/3, [illegible]

கெபிட்டல் ஸ்ட்ரட்டிஜிக் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பீவீ) எல்டிடி
PV 00241672
இல. 792/3, [illegible]

கெபிட்டல் [illegible] (பீவீ) எல்டிடி
PV 00241901
இல. 792/3, [illegible]

பணிப்பாளர்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) இன் கீழ் பின்வரும் நிறுவனங்கள் கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு பெயர்மாற்றப்பட்டுள்ளது என இத்தால் வழங்கப்படுகின்ற அறிவித்தல்.

கம்பனியின் பழைய பெயர் :
ஹைறப்ரோ ஹோல்டிங்ஸ் (பீவீ) எல்டிடி
கம்பனியின் புதிய பெயர் :
ஹைறப்ரோ ஹோல்டிங்ஸ் (பீவீ) எல்டிடி
18.02.2021 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது
பதிவுசெய்த இல: பி வீ 00232571
முகவரி : இல. 296, ஸ்ரீ ரத்னஜோதி சரவணமுத்து மாவத்தை, கொழும்பு - 13

கம்பனியின் பழைய பெயர் :
[illegible] (பீவீ) எல்டிடி
கம்பனியின் புதிய பெயர் :
[illegible] (பீவீ) எல்டிடி
07.05.2021 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது
பதிவுசெய்த இல: பி வீ 00235138
முகவரி : இல. 96/17A, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.

கம்பனியின் பழைய பெயர் :
அமேரிசியன் [illegible] (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர் :
அமேரிசியன் [illegible] (பீவீ) எல்டிடி
01.03.2021 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது
பதிவுசெய்த இல:
பி வீ 125071
முகவரி : இல. 123, 5 வது மாடி, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04.

செயலாளர் : வெஸ்ட் கோபரேட் சொலூசன்ஸ் எல்டிடி

## பதிவு செய்யப்பட்ட வாகனம் விற்பனைக்கு

| விவரம் | உற்பத்தி செய்யப்பட்ட வருடம் | வாகனசாலை (Yard) |
|---|---|---|
| LN - XXXX ISUZU Motor Lorry | 2009 | அருவை, பன்னிப்பிட்டிய. |
| LM - XXXX ISUZU Motor Lorry | 2009 | அருவை, பன்னிப்பிட்டிய. |
| ZA - XXXX HIDROMEX (HMK 102B) | 2017 | அருவை, பன்னிப்பிட்டிய. |

தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை வாகனங்களைப் பார்வையிட முடியும். விற்பனைக்கான கேள்வி மனுக்களை 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி மனுக்களுக்கான விண்ணப்பப்படிவத்தை மீளக்கையளிக்கப்படாத தொகை ரூபாய் 300/- செலுத்தி, பான் ஏசியா வங்கி, 135, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி மாலை 4.30 மணி வரை மட்டுமே கேள்வி மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**மேற்குறிப்பிட்ட விவரங்களுக்கான கேள்வி மனுக்களை இரத்துச் செய்வது அல்லது மீளப்பெற்றுக் கொள்வது தொடர்பான பூரண உரிமையும் முகாமைத்துவத்துக்கு உண்டு.**

முகாமையாளர் மீளப்பெறல்
பான் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பிஎல்சி
இல. 135, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06

**தொலைபேசி: 0775 978319, 0114 – 061548, 0768 371340**

கிளிநொச்சியில்

## 250க்கும் அதிகமான கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி

■ நடராசா கிருஸ்ணகுமார்



கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நெறிப்படுத்தில் சுமார் 300க்கும் அதிகமான கடலட்டைப் பண்ணைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் நிருபராஜ், கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் தற்போது 250க்கும் அதிகமான கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே அவர், இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், 2019ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் 50 கடலட்டைப் பண்ணைகளுக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும், டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் அது இப்போது 300ஐக் கடந்து உயர்ந்திருப்பதாகவும் கூறினார்.

இவற்றுள் பெரும்பாலானவைக்கு முழு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்த அவர், தழுவல் அனுமதி வழங்கப்பட்டுள்ள ஏனையவற்றுக்கும் முழு அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி பெறுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்று தெரிவித்த அவர், இதனால், கடலட்டைப் பண்ணை முயற்சியாளர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தழுவல் அனுமதிகளை வழங்கி, துரிதமாக கடலட்டைப் பண்ணைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வழிசெய்திருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தற்றுணிவான செயற்பாடுகள் காரணமாக, கடலட்டைப் பண்ணையாளர்கள் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டு வருகின்றனர் என, நிருபராஜ் மேலும் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்துதான் வரவேண்டும் என்றில்லை;

# வைரஸ் இங்கும் திரிபடையலாம்

### வைத்திய நிபுணர் விளக்கம்

■ கனகராசா சரவணன்



“திரிபடைந்த டெல்டா, அல்பா, பீற்றா போன்ற வைரஸ்கள் வெளிநாடுகளில் இருந்துதான் இலங்கைக்கு வரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இங்கிருக்கின்ற வைரஸ் அதிகமாகப் பரவலடையும் போது, அவை திரிபடைந்து மேற்படி வைரஸ்களாக மாறலாம்” என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நுண்ணுயிர் நிபுணரும் கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய விஞ்ஞான பராமரிப்பு பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்தியர் வைதேகி ரதீபன் பிரான்சிஸ் தெரிவித்தார்.

எனவே, இவற்றைக் கட்டுப்படுத்த ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

திரிபடைந்துவரும் கொரோனா வைரஸ் தொடர்பாக நேற்று (18) அவர் மேலும் விவரிக்கையில்,

“திரிபடைந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எங்களால் செய்ய வேண்டியது, பரவலை எவ்வளவுக்கு தடுத்துக் கொள்ள வேண்டுமோ, அவ்வளவு தடுத்துக் கொள்ளவேண்டும்.

“இந்தப் பரவலைத் தடுப்பதற்கு நாட்டை முடக்க வேண்டும். எனினும், அது நடைமுறைச் சாத்தியம் அற்றது. ஆகவே, இந்தப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு, இன்னும் கவனமாக, பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டு, எங்களை நாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

“நாங்கள் அனைவரும் ஒன்றுகூடும் இடங்களைத் தவிர்த்துக் கொள்வதுடன், கூட்டம் கூடுவதற்கான சந்தர்ப்பத்தை எப்போதும் உருவாக்கக் கூடாது. இக்காலகட்டத்தில் இவற்றைத் தவிர்த்துக் கொள்வது நல்லது” என்றார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இதுவரை 322பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 296 பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித்துறை நகர சபை

# தவிசாளர் பதவி விலகல்

■ எம்.றொசாந்த்



வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் பதவியிலிருந்து விலகுவதாக, கோணலிங்கம் கருணானந்தராசா, தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் உள்ளிட்டோருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

இதற்கமைய, ஜூலை 31ஆம் திகதியுடன் வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் பதவியிலிருந்து விலகுவதாக, அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கோணலிங்கம் கருணானந்தராசா, அந்தக் கட்சியின் நகர சபை தவிசாளராக தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த நிலையில், தமிழ்த் தேசிய கட்சியை எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர் ஆரம்பித்த நிலையில், அவர்களுடன் இணைந்து செயற்படுவதால், தமிழரசுக் கட்சி அவரை வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் பதவியிலிருந்து நீக்க முயற்சித்தது. எனினும் அது பின்னர் கைவிடப்பட்டது.

இந்நிலையில், தொடர்ந்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் நகர சபை தவிசாளர் பதவியை தொடர விரும்பாத காரணத்தால், பதவி விலகுகின்றேன் என்று, கோணலிங்கம் கருணானந்தராசா அறிவித்துள்ளார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை, வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

## ‘டெல்டா’ தொடர்பில் அவதானம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

நாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் ‘டெல்டா’ திரிபு தொடர்பில் காத்தான்குடி நகருக்கான கொவிட்-19 தடுப்புச் செயலணி விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

இதன்படி, இச்செயலணியால் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வெளி மாகாணத்திலிருந்து காத்தான்குடிக்கு வருகை தருபவர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யத் தவறுபவர்கள் மீண்டும் செல்ல ‘பாஸ்’ அனுமதி வழங்கப்படமாட்டாது.

‘கொவிட் தடுப்பூசிகளை

## கல்முனைக்கு விரைந்து வழங்கவும்’

■ எம்.எஸ்.எம். ஹனீபா


கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கு கொவிட்-19 தடுப்பூசிகளை விரைந்து வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் யூ.எல்.எம். பைஸர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

கொவிட்-19 தடுப்பூசி, இலங்கையின் சகல சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கு மாத்திரம் வழங்கப்படாமை அநீதியாகும். கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொவிட்-19 தொற்றின் தாக்கம் மிக வேகமாக அதிகரித்து வருவதோடு, மரண எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காத்தான்குடி

## தபாலகம் திறக்கப்பட்டது



■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மூன்று ஊழியர்களுக்கு ஏற்பட்ட கொவிட்- 19 தொற்றுக் காரணமாக மூடப்பட்டிருந்த காத்தான்குடி தபாலகம் 14 தினங்களுக்கு பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.

இதன்படி, காத்தான்குடி தபாலகத்துக்கு வந்த தபால்கள் பிரிக்கப்பட்டு, விநியோகிக்கும் நடவடிக்கையும் இடம்பெற்று வருவதுடன், ஊழியர்களும் கடமைக்குச் சமூகமளித்துள்ளனர்.

மின்சாரக் கட்டணம், நீர் கட்டணம் செலுத்தும் நடவடிக்கை உட்பட அனைத்து தபாலக நடவடிக்கைகளும் தற்போது இங்கு இடம்பெற்று வருகின்றன.

## கல்விச் சேவையில் இருந்து ஓய்வு

■ வி.ரீ.சகாதேவராஜா



பட்டிருப்பு வலயத்தின் மகிழூர் சரஸ்வதி வித்தியாலய அதிபர் நாகமணி புட்பமூர்த்தி, தனது 33 வருட கால கல்விச் சேவையில் இருந்து இன்று (19) ஓய்வுபெறுகிறார்.

இவர், தனது ஆரம்ப கல்வியை குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை பட்டிருப்பு மகா வித்தியாலயத்திலும் பயின்றார்.

1988 இல் நடந்த ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த புட்பமூர்த்தி, 22.08.1988 அன்று முதல் நியமனத்தை, குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தில் பெற்றார்.

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் 1990-92களில் ஆரம்பக் கல்வி பாடநெறி ஆசிரியராக பயிற்சிபெற்ற இவர் சிறந்த பேச்சாளராவார்.

பேராதனைப் பல்கைக்கழகத்தில் கலைப்பட்டதாரியாக வெளியேறிய இவர், பட்டமேல் கல்வி டிப்ளோமா பயிற்சியை, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பூர்த்திசெய்தார்.

**“ நாகமணி புட்பமூர்த்தி, 33 வருட சேவையில் இருந்து இன்று ஓய்வு**

2009 இல் நடைபெற்ற அதிபர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து, மண்டூர் மகா வித்தியாலயத்தில் முதல் அதிபர் நியமனத்தைப் பெற்றார். தொடர்ச்சியாக மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து இன்றுடன் ஓய்வுபெறுகிறார்.

தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு

## மதுபானம் கொண்டு சென்றவர்களுக்கு விளக்கமறியல்

■ டி.விஜித்தா

வட்டுக்கோட்டை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு மதுபானத்துடன் சென்ற இருவரை, மல்லாகம் நீதிமன்றம் தனிமைப்படுத்தலுடன் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்துள்ளது.

வட்டுக்கோட்டை கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்ட ஒருவருக்கு, வெள்ளிக்கிழமையன்று (16), மதுபானம் வழங்குவதற்காக இருவர் சென்றுள்ளனர்.







## நினைவு விழா...

மன்னார் மறை மாவட்டத்தின் மறைசாட்சிகள் நினைவு விழா, அமைதியான முறையில், நேற்று முன்தினமும் சனிக்கிழமையும் நடைபெற்றது. இதன்போது, நேற்று முன்தினம் (17) காலை 7.15 மணிக்கு அருட்பணி அன்டனி பொன்சியன் தலைமையில், நினைவு விழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.
(படப்பிடிப்பு: எஸ். றொசேரியன் லெம்பேட்)

இலங்கை நிர்வாக சேவைக்கு

## சத்தியஜீவிதா தெரிவு

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, அக்கராயனைச் சேர்ந்த சத்தியஜீவிதா ஜெயசேகரம், இலங்கை நிர்வாக சேவையின் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், அக்கராயன் மகா வித்தியாலத்தில் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வியையும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர் தரத்தில் உயிரியல் பிரிவிலும் கல்வி கற்றார்.

# வாள்வெட்டில் ஒருவர் படுகாயம்

■ செ.கீதாஞ்சன், சுப்பிரமணியம் பாஸ்கரன், சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, பாண்டியன் குளம், கரும்புள்ளியான் பகுதியில், நேற்று முன்தினம் (17) நள்ளிரவு, இனந்தெரியாத நபர்கள் நடத்திய வாள்வெட்டு தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கரும்புள்ளியான் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான செல்வராசா யாதவராசா (வயது 43) என்பவரே படுகாயங்களுக்கி உள்ளார்.

படுகாயமடைந்த நபர், மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

**“ கரும்புள்ளியான் பகுதியைச் சேர்ந்த செல்வராசா யாதவராசா என்பவர், படுகாயமடைந்த நிலையில், மல்லாவி வைத்தியசாலையிலும் பின்னர் வவுனியா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்**

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆளும் கட்சியின் இரண்டு எம்.பிக்களும்

# மக்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும்

■ வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்




தொல்லியல் நிலையங்கள் என தமிழ் மக்களுடைய நிலங்கள் ஆக்கரமிக்கப்படுகின்றது. எனவே, ஆளும் கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், அரசாங்கம் செய்யும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி மக்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது காரியாலயத்தில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மேச்சல்தரை பகுதியான மயிலத்தமடு பகுதியில் அம்பாறை, பொலன்றுவை மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள் வெளியேறாமல் மீண்டும் பயிர் செய்துகொண்டு, எமது பண்ணையாளர்களின் கால்நடைகளை தாக்கி வருகின்றார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் மனித உரிமை அமைப்புகளும் இதற்காக பல்வேறுபட்ட எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஆனால், தற்போதுகூட வெளிமாவட்டங்களில் இருந்துவந்த குடியேறிகள் 40 பேர் வரையில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் மீண்டும் பயிர் செய்துள்ளனர்.

தொடர்ந்தும் பண்ணையாளர்களின் கால்நடைகளைத் தாக்கி வருகின்றனர். 3 மாதத்தில் 10 மேற்பட்ட கால்நடைகள் சுடப்பட்டுள்ளன. இது தொடர்பாக கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றால், அவர்கள் அதை உதாசீனம் செய்கின்றனர்.

நாங்கள் பாரம்பரியமாக செய்து வந்த தொழில்களை எங்களால் செய்ய முடியாதளவு நெருக்கடி இருக்கின்ற சூழலில், இந்த ஆளும் கட்சியில் பங்காளிகள், அபிவிருத்திக்குழு தலைவர்கள் என்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றவர்கள், அந்த பக்கமே போகின்றார்கள் இல்லை என்றார்.

**“ நாங்கள் பாரம்பரியமாக செய்து வந்த தொழில்களை எங்களால் செய்ய முடியாதளவு நெருக்கடி இருக்கின்ற சூழலில், இந்த ஆளும் கட்சியில் பங்காளிகள், அபிவிருத்திக்குழு தலைவர்கள் என்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றவர்கள், அந்த பக்கமே போகின்றார்கள் இல்லை**

இரத்தினபுரி மாவட்ட

# தமிழ்ப் பாடசாலைகளுக்கு ரூ.30 மில். நிதி ஒதுக்கீடு



இரத்தினபுரி மாவட்டத்தின் நான்கு தமிழ்ப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் வேண்டுகோள் விடுத்ததற்கமைய, ஆரம்ப கட்டமாக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், கலவான தமிழ் மகா வித்தியாலயத்துக்கு மாணவர்கள் கல்வி கற்பதற்கு வகுப்பறைகளுடன் கூடிய புதிய கட்டடமொன்று அமைப்பதற்கும், தொலொஸ்வல பாரதி தமிழ் வித்தியாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யவும், ஹிதெல்லன தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதியொன்றை அமைப்பதற்கும், மாதம்பை இலக்கம்:02 தமிழ் மகா வித்தியாலயத்தின் மலசலகூட வசதிகளை செய்து கொடுப்பதற்கும் இந்நிதி ஒதுக்கீடு முன்மொழியப்பட்டுள்ளது.

# குழந்தைகளை தாக்கிய தந்தை கைது

■ சுமணசிறி குணதிலக

தனது குழந்தைகள் இருவரையும் மனிதாபிமானமற்ற ரீதியில் தாக்கிய தந்தையொருவர், புத்தல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தல, உடகம பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், மதுபோதையில் வீட்டுக்கு வந்து, தனது 6 மற்றும் நான்கரை வயதான குழந்தைகள் இருவரையும் மனிதாபிமானமற்ற முறையில் தாக்குவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை வெல்லவாய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தாக்குதலுக்கு இலக்கான இரண்டு குழந்தைகளும் வைத்திய பரிசோதனைக்காக, புத்தல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# இந்துவை கண்காணித்த எம்.பி

■ மஹேஸ் கீர்த்திரத்ன

1,000 பாடசாலைகள் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், அபிவிருத்தி செய்யப்பட்ட கைக்காவல மகா வித்தியாலயம், இரத்தோட்டை இந்துக் கல்லூரி என்பவற்றின் அபிவிருத்தி பணிகளை, இரத்தோட்டை ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹன திஸாநாயக்க, நேற்று (18) கண்காணித்தார்.



# பார்ப்பாரற்ற நிலையில் சுவரோவியங்கள்

■ கே.சுந்தரலிங்கம்

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது, பெரிதும் முக்கியத்துவமளித்து இளைஞர், யுவதிகளுக்கு கைகொடுக்கும் வகையில், நகரங்கள் மற்றும் மூலை முடுக்கெங்கும் உள்ள சுவர்களில் வரையப்பட்ட சுவர் ஓவியங்கள், இன்று பார்ப்பாரற்று பாழாகிப் போயுள்ளன.

சுற்றுப்புற சூழலை அழகுப்படுத்தும் நோக்கிலும் இளைஞர், யுவதிகளின் திறமைகளுக்கு கைகொடுக்கும் வகையிலும் கடந்த காலங்களில் இந்தச் சுவரோவியங்கள் வரையப்பட்டன.

மூலப்பொருள்களுக்காகவும் வரைவதற்காகவும் பாரிய நிதி செலவிடப்பட்டதுடன், ஒரு சில இடங்களில் இந்தச் சித்திரங்களை வரைவதற்காக மதில் அருகில் காணப்பட்ட மரங்களும் வெட்டி அகற்றப்பட்டன.

இவ்வாறு பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வரையப்பட்ட இந்தச் சித்திரங்கள் எவ்வித பராமரிப்புமின்றி அழிந்து போகும் நிலையில் உள்ளன.

எனவே, குறித்த ஓவியங்கள் காணப்படும் பிரதேசங்களில் உள்ள அரச நிறுவனங்கள், இந்தச் சித்திரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, புத்திஜீவிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

சிறுமியின் மரணம் தொடர்பான

# ‘உண்மையை வெளிப்படுத்தவும்’

## ‘ட்ரொடெக்ட்’ அமைப்பின் தலைவி வேண்டுகோள்

■ எஸ்.கணேசன்



"டயகம சிறுமியின் மரணம் தொடர்பான உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இவற்றை வலியுறுத்தி நாம் போராடுவோம். அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என, வீட்டுப் பணிப்பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான ட்ரொடெக்ட் அமைப்பின் தலைவி கருப்பையா மைதிலி தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே, அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் வேலைசெய்த டயகம பகுதி சிறுமியொருவர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார். பல தகவல்கள் வெளியானாலும், சட்டபூர்வமான அறிவிப்பு இன்னும் தெரியவரவில்லை. தரகர் ஒருவர் ஊடாகவே அச்சிறுமி சென்றுள்ளார். சிறாரை எவ்வாறு வேலைக்கு அமர்த்த முடியும்? இதற்கு முன்னரும் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

"எனவே, சிறுமியின் மரணம் தொடர்பில் எமக்கு உண்மை தெரியவரவேண்டும். எமக்கு நீதி அவசியம். எந்தவொரு தகவலும் மூடிமறைக்கப்படக்கூடாது. அதற்காக வீட்டுப்பணிப் பெண்களுக்காக குரல் கொடுக்கும் எமது சங்கம் போராடும். வீட்டுப்பணிப்பெண்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

"மலையகப் பகுதியில் நாம் விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றோம். இதனால் பெண்கள் இன்று கேள்வி எழுப்பும் நிலை உருவாகியுள்ளது. சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை அனுமதிக்க முடியாது. அதற்கு சட்டத்தில் இடமும் இல்லை. பெண்களை வேலைக்கு செல்ல வேண்டாம் எனக்கூறவில்லை. ஆனால், அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்" என்றார்

பன்விலை விக்னேஸ்வராவுக்கு

# புதிய அதிபர் நியமனம்

■ மெய்யன்

கண்டி பன்விலை க/வத்/ விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக கே.கோபாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டள்ளார்.

அதிபர் சேவையில் இரண்டாம் தரத்திலுள்ள இவர், விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபருக்குரிய கடமைகளை அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

தெல்தெனிய கல்வி வலய ஊருகலை தமிழ் வித்தியாலயத்திலும் மாபெரிதன்ன தமிழ் வித்தியாலயத்திலும் வாணி தமிழ் வித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றி பன்விலை-ஆத்தளை தமிழ் வித்தியாலயத்தின் அதிபராகக் கடந்த 15 வருடங்களாகக் கடமையாற்றிய நிலையில், தற்போது-கண்டி பன்விலை க/வத்/ விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டள்ளார்.






ரூ.2 இலட்சம் பெறுமதியான

# கஞ்சாவுடன் இளைஞன் கைது

■ ஆ.ரமேஸ்

இராகலையில் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான கஞ்சா போதைப்பொருளுடன் 25 வயதுடைய இளைஞரை, இராகலை பொலிஸார் நேற்று முன்தினம் (17) மாலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞரிடமிருந்து 200 சிறிய பக்கெட்டுகளில் பொதி செய்யப்பட்ட கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இராகலை தோட்டத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு உள்ளாரென, இராகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்த சமரகோன் தெரிவித்தார்.

சந்தேகநபர், மிக நீண்ட காலமாக இராகலை பிரதேசத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை, பொலிஸ் விசாரணையின் பின், வலப்பனை நீதி மன்றத்தில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.





# இஷாலினிக்கு நீதிகோரி...

■ ரஞ்சித் ராஜபக்ஷ



பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த டயகமயைச் சேர்ந்த 15 வயது சிறுமி, தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த நிலையில், அவரது மரணம் தொடர்பான விசாரணைகளை உரிய முறையில் முன்னெடுக்குமாறு வலியுறுத்தி, நேற்று (18) ஹட்டன் நகரில், மலையக மக்கள் முன்னணி கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தலைமையில், எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# சிறுமிகளைக் கர்ப்பமாக்கிய தந்தை கைது

■ எம். செல்வராஜா

13, 15 வயதுகளையுடைய இரண்டு சிறுமிகள் கர்ப்பம் தரிக்கக் காரணமாக இருந்த, அவர்களது தந்தை, பேராதனை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்டு, எல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பதுளை, தெமோதர பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாய், தந்தை, இரு சிறுமிகளைக் கொண்ட குடும்பத்தில், குறித்த 2 சிறுமிகளுக்கும் வயிற்று வலி ஏற்பட்டதையடுத்து, அச்சிறுமிகளின் தாய் அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது, சிறுமிகள் இருவரும் கர்ப்படைந்துள்ளமை உறுதி செய்யப்பட்ட நிலையில், அப்பிள்ளைகளின் தந்தை பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியிருந்தார்.

இந்த நிலையிலேயே, சந்தேகநபரான தந்தை, பேராதனை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததை அடுத்து, மேலதிக விசாரணைகளுக்காக எல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கொரோனா செய்தித் துளிகள்

மொனராகலை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பிரிவில், நேற்று (18) 27 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.
(சுமணசிறி குணதிலக)

பதுளை பொது வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் 20 பேருக்கும் அலுவலக சபையினர் இருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பதுளை கிளை தவிசாளர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
(பாலித ஆரியவன்ஸ)

பதுளை, பிஹாராவ பிரதேசத்தைச் சேர்ந்த 11 வயது பிள்ளை, கொரோனா தொற்றால் நேற்று (18) உயிரிழந்துள்ளது.
(பாலித ஆரியவன்ஸ)

பதுளை, உடவெல பிரதேசத்தில் 20 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், இதில் நீர் விநியோகத் திட்டமொன்றில் பணியாற்றி வரும் 4 பேரும் உள்ளடங்குகின்றனர்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அக்குறணைப் பிரதேசத்தைச் சேர்ந்த 3 தொற்றாளர்களும் ஒரே நாளில் உயிரிழந்துள்ளனர் என, வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன
(சேஹ்ன் செனவிரத்ன)

ஹட்டன், டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் (17) 5 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து. 40 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளர்.
(சுதத் எச்.எம்.ஹேவா)

லுணுகலை பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று (18) 21 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், பசளை கோணக்கலை மேற்பிரிவில் 2 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
(நடராஜா மலர்வேந்தன்)

பேராதனை போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றும் 45 பேரில் 40 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால், பாதுகாப்பு பிரிவினர் முழுமையாக கடமைகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.
(சேஹ்ன் செனவிரத்ன)

மீள்பிரசுரமாக வெளியிடப்பட்ட

# ‘தோட்ட தொழிலாளர்களின் வீரப் போராட்டம்’



மலையகத்தின் ‘புரட்சிபாலன் பட்டணம்’ பி.ஆர். பெரியசாமியின் 55ஆவது நினைவு தினமும் 1957ஆம் ஆண்டு அவர் எழுதி வெளியிட்ட ‘தோட்டத் தொழிலாளர்களின் வீரப் போராட்டம்’ நூலின் மீள்பிரசுர வெளியீடும் அண்மையில் வெள்ளவத்தை, சன்முகாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது, தோட்டத்தொழிலாளர்களின் யதார்த்த பூர்வமான அன்றைய நிலைமைப் பற்றி, 1957இல் வெளிவந்த அவரது நூல் எடுத்துக்காட்டுவதாக முன்னாள் அமைச்சர் பி.பி.தேவராஜ் தெரிவித்தார்.

அத்துடன், இந்நிகழ்வில் பெரியசாமி அவர்களின் வீரம் ததும்பிய மேடைப் பாடல்களை நினைவுபடுத்திய மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் தெளிவத்த ஜோசப், தோட்டத் தொழிலாளர்களின் வீரப்போராட்டம் என்ற நூல் சிறிதானாலும் அது எழுப்பிவிடும் மலையகப் போராட்ட நினைவலைகள் கடல் போன்றது என்றார்.

# நாட்டை கொடிய நச்சுப் பாசாணமாக்கும் அணுகுமுறை வேண்டாம்

அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், மாடுகள் வெட்டுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ். டி.ஏ.பி பொரலெஸ்ஸ, சகல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகளுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பானது, நாளை மறுதினம் (21) கொண்டாடப்படவுள்ள ஹஜ்ஜுப் பெருநாளன்று வழங்கப்படும் குர்பான் கடமையை, சிக்கல் நிலைமைக்குள் தள்ளியுள்ளது. இது, அப்பட்டமாக மதஉரிமையை மீறும் செயலாகும்.

குர்பான் கொடுப்பது, முஸ்லிம்களின் வழிமுறையாக அல்லாஹ்வால் ஆக்கப்பட்டுள்ளதுடன், கட்டாயமான மதக் கடமையாக வலியுறுத்தியும் சொல்லப்பட்டுள்ளது. எனவே, இலங்கை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தியதற்கு மாறாக, இஸ்லாமியர்கள், தமது மதக்கடமையை நிறைவேற்றுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வக்பு சபை, பள்ளிவாசல்கள் அமைந்துள்ள காணிகளில் குர்பான் கொடுப்பதற்காக மாடுகள் அறுப்பதற்கு அனுமதி இல்லை என, அண்மையில் தீர்மானம் எடுத்திருந்தது. வக்பு சபையின் இந்தத் தீர்மானம், பள்ளிவாசல்களில் மாடறுக்கும்போது, இறைச்சியை பெற்றுக்கொள்வதற்காகவோ அல்லது, 'விடுப்பு' பார்ப்பதற்காகவோ மக்கள் கூடலாம்; இதனால் 'குர்பான் கொரோனா கொத்தணி' உருவாகிவிடக்கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டிருக்கலாம். ஆனால், மக்கள் கூடாதவாறு கட்டுப்பாடுகளை விதித்து, பள்ளிவாசல்களில் இதற்கென அமைக்கப்பட்டிருக்கும் இடவசதியில் குர்பான் மதக்கடமையை நிறைநேற்றுவதற்கு ஆலோசனை நல்கியிருக்கலாம்.

கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவலைத் தடுக்கும் நோக்கத்துடன், தேசிய சுகாரத்தையும் தேசிய பாதுகாப்பையும் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கம், மதவழிபாடுகளையும் மனித நடமாட்டங்களையும் தடைசெய்திருந்தது. ஆனால், குர்பான் கொடுப்பதால் தேசிய சுகாரத்துக்கும் தேசிய பாதுகாப்புக்கும் எந்த வகையான அச்சுறுத்தல் ஏற்படும் என்பது தொடர்பில் அரசாங்கத்தின் தடை உத்தரவில் விவரிக்கப்பட்டிருக்கவில்லை. எதற்காக இந்தத் தடை என்பது குறித்து எந்தத் தெளிவும் இன்றி, அரசாங்கத்தின் கொள்கை ரீதியாகச் செயற்படுமாறே உள்ளூராட்சி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருந்தார்கள்.

ஆனால், 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில்தான், பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட மாடறுப்பைத் தடைசெய்வதற்கான யோசனையை அமைச்சரவை அங்கிகரித்திருந்தது. இந்த அமைச்சரவை அங்கிகாரம் சட்டமூலமாக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பில் விவாதம் நடத்தப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, அதில் வெற்றிபெற்றதன் பின்னர், சட்டமாக்கப்பட வேண்டும். அதன் பின்னரே மாடறுப்பு தொடர்பான, மதச்சடங்குக்குத் தடைகளை விதிக்க முடியும்.

அரசாங்கத்தின் மீது, அதிருப்தியுற்றிருக்கும் சிங்கள-பௌத்த மக்களைக் குளிர்ச்சியடையச் செய்வதற்கான ஒரு காய்நகர்த்தலாகத்தான் குர்பான் தடை அமைந்துள்ளதோ என்று, கடந்த கால கசப்பான அனுபவங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் எண்ணத்தோன்றுகின்றது. இத்தகைய அணுகுமுறைகள், மூவினங்களும் இணைந்துவாழவேண்டிய நாட்டை, கொடிய நச்சுப் பாசாணமாக மாற்றிவிடும் என்பதை இதற்குப் பின்புலத்தில் இருப்போர் உணரவேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அடக்குமுறைச் சிந்தனைகள்



என்.கே. அஷோக்பரன்

இலங்கையர்களின் 'ட்விட்டர்' சமூக வலைத்தளப் பகுதியில், இலங்கையின் பிரபல ஊடக நிறுவனமொன்றின் பணிப்பாளரான, அரசியல் பின்புலத்திலிருந்து வந்த பெண்மணி ஒருவர், அண்மையில் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டார். அவர், முன்னொருபொழுது வழங்கியிருந்த பேட்டியொன்றும் பெண் தலைமைத்துவ விருது வழங்கல் நிகழ்வொன்றில் ஆற்றியிருந்த உரையொன்றும், மீண்டும் 'ட்விட்டர்' தளத்தில் பகிரப்பட்டதே, அவர் விமர்சனங்களைச் சந்திக்கக் காரணமாயிற்று.

அந்த விருது வழங்கும் விழாவில், அவர் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்த விடயங்கள், இங்கு கவனமீர்ப்பதாக அமைகிறது. அந்த உரையின் இரத்தினச் சுருக்கம், தன்னிடம் அதிகாரம் வந்தால், தான் ஊடகங்களையும், சமூக ஊடகங்களையும் போர்க்கால அறையொன்றை அமைத்து, தணிக்கை செய்வேன் எனும் தொனியில் அமைந்திருந்தது. அவருக்கெதிரான விமர்சனங்கள் முன் வைக்கப்படுவதற்கு இந்தக் கருத்து முக்கிய காரணமாகியது.

சில விமர்சகர்கள், இந்தப் பெண்மணியை ஹிட்லரின் பிரசாரப் பீரங்கியான கோயபெல்ஸுடன் ஒப்பிடவும் செய்தார்கள். அதன் பொருத்தப்பாடுகள் எவ்வாறு இருப்பினும், இந்த ஒப்பீட்டுக்கான காரணம், 'தணிக்கை' எனும் இரும்புக்கரத்தைக் கொண்டு, அடக்குமுறையைப் பயன்படுத்தி ஊடகங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, பேச்சுரிமை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகியவற்றை மீறிச்செயற்பட்டு, அதனூடாகத் தமது கருத்துகளை மட்டும் பிரசாரம் செய்தல் போன்ற எண்ணங்களை, குறித்த பெண்மணி வெளிப்படுத்தியதாக இருக்கலாம்.

சுதந்திரத்துக்கான மனிதனின் வேட்கை என்பது, குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல. 1320இன் ஸ்கொட்லாந்தின் சுதந்திர பிரகடனமான 'ஆப்ரோத்' அறிவிப்பில், "நாம் போராடுவது புகழுக்காகவோ, செல்வத்துக்காகவோ, மதிப்புக்காகவோ அல்ல. நாம் எந்த நல்ல மனிதனும் விட்டுக்கொடுக்காத, அதற்கான தன் உயிரையும் விடத்துணியும் சுதந்திரத்துக்காக மட்டுமே போராடுகிறோம்" என்று வெளிப்பட்டிருந்த வார்த்தைகள் சுதந்திரத்துக்கான மனிதனின் வேட்கையை எடுத்துக்காட்டும் சிறந்த உதாரணங்களுள் ஒன்றாகும். உரிமைகளும் சுதந்திரமும் அடக்கப்படும் போது, அதை பெற்றுக்கொள்ள மனிதன் தன் உயிரையும் பணயம் வைக்கத்தயங்கியதில்லை என்பதற்கு உலக வரலாறே சாட்சி. அதனால்தான், உலக வரலாற்றில் வல்லாட்சிகள் நீடித்து நிலைத்ததில்லை.

"மனிதனின் இருப்பை உறுதிப்படுத்துவதே, அவனது சிந்தனைதான் என்பது மேற்குலகின் தத்துவ அடிப்படைகளில் ஒன்று" என்பார் பிரெஞ்சுத் தத்துவவியலாளரான ரெனே டெய்காட். ஆகவே, சிந்தனை என்பது மனிதனின் இருப்பின் அடிப்படைகளில் ஒன்று! அதனால்தான், சிந்தனைக்கான சுதந்திரம் என்பது, மனித இருப்பின் அடிப்படை. சிந்தனையின் தொடர்ச்சிதான், அதன் வெளிப்பாடு. ஆகவே தான், மனித உரிமைகளின் அடிப்படையானதாக பேச்சுரிமை அதாவது, சிந்தனைகளின் வெளிப்பாட்டுரிமை அமைகிறது.

பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து, வெளியான மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பிரகடனத்தில், பேச்சுரிமையின் முக்கியத்துவம், "கருத்துகள் மற்றும் அபிப்பிராயங்களின் கட்டற்ற தொடர்பாடல் என்பது மனிதனின் உரிமைகளில் கட்டற்ற பொக்கிஷமாகும்"என்ற வார்த்தைகளின் ஊடாக அங்கிகரிக்கப்பட்டு இருந்தது. ஆனால், அது பேச்சுரிமைக்கான சட்டரீதியிலான மட்டுப்பாடுகள் உருவாக்கப்பட முடியும் என்பதையும் குறிப்பிட்டிருந்தது.

ஆனால், இதன் பின்னர் அடுத்த சில வருடங்களில் பிறந்த அமெரிக்க அரசியலமைப்புக்கான முதலாவது திருத்தம் பேச்சுரிமை, ஊடக உரிமை, ஒன்றுகூடலுக்கான உரிமை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டமியற்றமுடியாத மட்டுப்பாட்டை அமெரிக்க கொங்கிரஸுக்கு ஏற்படுத்தும் அளவுக்குப் பேச்சுரிமையின் முக்கியத்துவத்தை அங்கிகரித்திருந்தது. எவரும் தாம் விரும்பிய சிந்தனைகளைக் கொண்டிருக்கவும் அதனைப் பேசவும் அச்சிடவும் பிரசாரம் செய்வதற்குமான உரிமை அங்கிகரிக்கப்பட்டமை, மனித வரலாற்றின் பெரும் திருப்புமுனை.

அமெரிக்காவைப் போன்ற பரந்த பேச்சுரிமைக்கான அங்கிகாரம் பல்வேறு நாடுகளுக்கும் உவப்பானதாக அமையவில்லை. காரணம், பல்வேறு நாடுகளுக்கும் வேறு முக்கிய நிகழ்ச்சி நிரல்கள் இருந்தன. அதில் முக்கியமானது மதம். மதச்சார்புடைய நாடுகள், தமது மதங்களைப் பாதுகாக்கத் தலைப்பட்டன. அதற்காக பேச்சுரிமையை மட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. மேலும் முடியாட்சி, சர்வாதிகார ஆட்சி, கம்யூனிஸ வல்லாட்சி உடைய நாடுகள், தம்முடைய அதிகாரத்தைப் பாதுகாக்க, பேச்சுரிமையை மட்டுப்படுத்தின. இந்த நிலைமை இன்றும் தொடர்கிறது.

சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியை விமர்சிப்பது, கடும் விளைவுகளைக் கொண்டதாக அமையும். ஆட்சியாளர்களை மீறி, எந்தவொரு தகவலும் கூட மக்களைச் சென்றடைய முடியாத நிலை அங்கு நிலவுகிறது. சிங்கப்பூரில் கூட, பேச்சு சுதந்திரம் என்பது பெரும் மட்டுப்பாடுகளைக் கொண்டதாகவே இருக்கிறது. இதன் விளைவுதான் சிங்கப்பூரை சுதந்திரகாலம் முதல் ஒரே கட்சி ஆண்டு வருகிறது.

இந்தப் பின்புலத்தில்தான் இலங்கையில், குறிப்பாக அதிகார பரப்பில் உள்ளவர்களிடம் உருவாகியுள்ள தணிக்கை மீதான பற்று, இலங்கையர்களின் பேச்சுரிமையையும் வெளிப்பாட்டு உரிமையையும் கட்டுப்படுத்துவதில் கொண்டுள்ள ஈர்ப்பு, தகவலறியும் மக்களின் உரிமை ஆகியவற்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதற்கான துடிப்பு என்பனவற்றை நாம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

சீனாவிடமிருந்தும் சிங்கப்பூரிடமிருந்தும் உற்பத்தியை அதிகரிக்கும் முறைகள், உட்கட்டமைப்பு அபிவிருத்தி உபாயங்கள் போன்றவற்றைக் கற்றுக்கொள்ளாது, அவற்றின் அடக்குமுறை வழிவகைகளை மட்டும் பின்பற்ற விளைவதன் நோக்கம், ஆட்சியாளர்கள் தம் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளல், அதிகாரத்தைப் பலப்படுத்தல் என்பதாகவே அமைகிறது.

சமூக ஊடகங்களுக்கு முற்பட்ட காலத்தில், அரச ஊடகம் அரசாங்கத்தின் கைப்பிள்ளையாக இருந்த நிலையில், தனியார் ஊடகங்களை சாம, தான, பேத, தண்டங்களினூடாகத் தமக்குச் சாதகமாக மாற்றிக்கொள்வதன் மூலம், மக்களின் தகவலறியும் உரிமையை பெருமளவுக்குக் கட்டுப்படுத்தும் கைங்கரியத்தை ஆட்சியாளர்கள் முன்னெடுத்தார்கள்.

ஆட்சியாளர்களுக்கு எதிராக கருத்துகளைத் வெளிப்படுத்திய தனியார் ஊடகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுதல், ஊடகவியலாளர்கள் காணாமல் போதல், கொல்லப்படுதல் என்பவை எல்லாம் நாம் காணாததல்ல. ஆனால், சமூக ஊடகங்களின் வருகை, வல்லாட்சியாளர்களுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் பெரும் சவாலாக மாறியிருக்கிறது.

தன்னைப் பெரும் மரியாதைக்குரிய நபராகக் காட்டிக்கொள்ள விளையும் ஆட்சியாளர் ஒருவர், மிக முக்கியமானதாகக் கருதி வெளியிட்ட 'பேஸ்புக்' கருத்துக்கு 'ஹஹா' போட்டுச் சிரிக்கும் நபர்களை, அவர்களால் கட்டுப்படுத்த முடியாதது, அவர்களின் ஈகோவை பெருமளவு பாதிப்பதுடன், இரத்தக் கொதிப்பை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லைத்தான்.

இதேபோலத்தான், பெரும் அரசியல் பின்புலத்திலிருந்து வந்து, நாட்டின் செல்வாக்கு மிக்க ஊடகமொன்றை நடத்திக்கொண்டிருக்கும் ஒருவர், அவர் கூறிய அரைகுறைத்தனமான கருத்துக்காகப் பொதுவெளியில் சாதாரண குடிமக்களால் விமர்சிக்கப்படும் போது, அது அவரின் ஈகோவை மிகக் காயப்படுத்துவதாக அமைகிறது. பெரிய நிலைகளில் இருந்தாலும், தாழ்வுச்சிக்கல் நிறைந்த மனங்களால் நியாயமான விமர்சனங்களைக் கூட ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆகவேதான், தணிக்கை, போர்க்கால அறை அமைத்து கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த முயலுதல் ஆகிய வல்லாதிக்க சிந்தனைகளை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

"ஜனநாயகம் என்பது சிக்கலானதுதான். ஜனநாயகத்துக்கு எதிரான மிகச் சிறந்த வாதம் சராசரி வாக்காளருடனான ஐந்து நிமிட உரையாடலாகும்" என்றார் சேர் வின்ஸ்டன் சேர்ச்சில். ஆனால், அவரேதான், "ஜனநாயகம் மிகச் சிறந்தது என்று யாரும் பாசாங்கு செய்யவில்லை. அவ்வப்போது முயற்சிக்கப்பட்ட மற்ற அனைத்து ஆட்சி வடிவங்களிலும் ஜனநாயகம் மோசமான தன்மை குறைந்தது" என்றும் தெரிவித்தார்.

சுருக்கமாகச் சொன்னால், இதுவரை மனிதன் முயற்சித்த எல்லா ஆட்சி வடிவங்களிலும், ஜனநாயகமே ஒப்பீட்டளிவில் சிறந்ததாக இருக்கிறது. அதற்குக் காரணம், அது தனி மனித உரிமைகளையும் சுதந்திரங்ளையும் மதிக்கிறது. வல்லாட்சியைத் தடுப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டமைகிறது.

வெறும் தேர்தல்கள் மட்டும்தான் ஜனநாயகம் என்பது பொய். தனி மனித சுதந்திரங்களும் உரிமைகளும் இல்லாத நாடு, வெற்றுத் தேர்தல் நாடகத்தை அரங்கேற்றுவதால் ஜனநாயக நாடாகிவிடாது. ஆனால், இந்த தனி மனித உரிமைகளும் சுதந்திரங்களும் வல்லாட்சி நோக்கும், அதனை அடைந்துகொள்வதற்கான அடக்குமுறைச் சிந்தனைகளும் கொண்ட ஆட்சியாளர்களுக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் உவப்பானதாக இருப்பதில்லை.

ஆகவேதான் தனிமனித உரிமைகளை அடக்கியாள அவர்கள் முனைகிறார்கள். தமது உரிமைகளையும் சுதந்திரத்தையும் இத்தகைய ஆட்சியாளர்களிடமிருந்தும், அவர்களது அடிவருடிகளிடமிருந்தும் மக்கள் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாப்பது அவசியம். சுதந்திரங்களும் உரிமைகளும் ஒருமுறை பறிபோய்விட்டால், அதனை மீட்பதற்கு மனிதகுலம் பெரும் போராட்டத்தை சந்திக்க வேண்டியதாக இருக்கும். அதற்கு உலக வரலாறே சாட்சி.



## வாழ்வியல் தரிசனம்

எந்தவொரு தனிமனிதனையோ அணியினரையோ குழுவினரையோ, துன்புறுத்துவதற்கு உட்படுத்துவதோ விலக்கிவைப்பதோ தீமைகளையே உருவாக்கும்.

யாவரையும் முழுமையாக ஏற்றுக்கொள்வேன் எனும் திடசங்கற்பத்துடன், இறைவனுக்கு வாக்குறுதி அளிப்பீர்களாக!

இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும்.

இந்தப் பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும், இந்தப் பிரகடனத்தைக் கடவுள் முன் ஒப்படைத்து, அதன்படி ஒழுகினால், அதன் பெறுபேற்றை மக்கள் உடன் அறிந்து தெளிவார்கள்.

உலகத்தில் பாவங்கள் மிகவும் உக்கிரமாகக் கூடிக்கொண்டு வருகின்றன. இந்த நிலைமையைச் சரிசெய்வது எப்படி?

ஒவ்வொரு பிரஜையும் தன்னைத்தான் உணர்ந்தும் உலகமாற்றங்களையும் துன்பங்களையும் மனமாறத் தெரிந்துகொண்டால், கெட்ட குணங்கள் எரிந்து அழிந்து விடும்.

மீண்டும் புதியதொரு களிப்புமிக்க மக்கள் கூட்டத்துடன் மிடுக்கு, நேர்மை மிகுந்து உறுதியுடன் அவதாரம் எடுக்கும் யுகங்கள் தோறும், போரும் அழிவும் நடந்த வண்ணமே உள்ளன.

இந்நிலை தொடராமல் இருக்க, சத்திய புருஷர்களாக உருவாகியே தீரவேண்டும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்


### உடைந்து ஒரு வருடம் கடந்தும்

## திருத்தப்படாத சாய்ந்தமருது பாலம்

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை வீதியில் தோணாவைக் கடந்து அடுத்த வீதிக்கு செல்வதற்கு அல் - அமீன் சமூக அபிவிருத்தி அமைப்பால் நிர்மாணிக்கபட்ட பாலம், 2020ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவு அகற்றும் உழவு இயந்திரம் இப்பாலத்தின் ஊடாகச் சென்று குடைசாய்ந்ததால், இந்தப் பாலம் உடைந்தது.

மக்களின் போக்குவரத்துக்கு அவசியமான இப்பாலம், ஒரு வருடம் கடந்தும் இதுவரை திருத்தப்படாமல் உடைந்தபோது இருந்த அதே நிலையிலையே இதுவரையும் காணப்படுகின்றது. இதனால், பொதுமக்களின் போக்குவரத்துக்கு பெரிதும் இடைஞ்சலாக இருப்பதாக பாதிக்கப்படும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் பாலத்தைத் திருத்துவது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் என மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

நூருல் ஹுதா உமர்



# தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பு

2021ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் (ஜனவரி  ஜூன்) தேயிலை ஏற்றுமதி வருமானம் 14 சதவீதத்தால் அதிகரித்து, 650 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது. இக்காலப்பகுதியில், ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த தேயிலையின் அளவில், 10 சதவீத அதிகரிப்பு பதிவாகி இருந்ததுடன், 137 மில்லியன் கிலோ கிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

ஆசியா சியாகா கொமோடிட்டீஸ் பிஎல்சி முன்னெடுத்திருந்த ஆய்வின் பிரகாரம், 2021ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில், ஜூன் மாத தேயிலை ஏற்றுமதியால் அதிகளவு ஊக்குவிப்பு வழங்கப்பட்டு இருந்ததாகக் கண்டறியப்பட்டு உள்ளது. கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் பதிவாகியிருந்த உயர்ந்த ஏற்றுமதி பெறுமதியை, ஜூன் மாதத்தில் பதிவு செய்திருந்தது.

2015 ஆம் ஆண்டில், இலங்கை இறுதியாகத் தனது வருடாந்த தேயிலை ஏற்றுமதியை, 300 மில்லியன் கிலோ கிராம்களுக்கு அதிகமாகப் பதிவு செய்திருந்தது. அந்த வருடத்தின் முதல் அரையாண்டு காலப்பகுதியில், தேயிலை ஏற்றுமதி 151 மில்லியன் கிலோ கிராம்களாகப் பதிவாகியிருந்தது.

அந்நியச் செலாவணி வருமானமீட்டல் 20 சதவீதத்தால் அதிகரித்து, 127 பில்லியன் இலங்கை ரூபாயாகப் பதிவாகியிருந்தது. இது சுமார்



650 மில்லியன் அமெரிக்க டொலராகும். 2020ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 13.8 சதவீத அதிகரிப்பாகும்.

துருக்கிக்கான தேயிலை ஏற்றுமதி உயர்வடைந்திருந்தது. 17 மில்லியன் கிலோ கிராம் தேயிலை துருக்கிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து ஈராக்குக்கு 16 மில்லியன் கிலோ கிராமும் ரஷ்யாவுக்கு 13.3 மில்லியன் கிலோ கிராம் தேயிலையும் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் ஊடான ஏற்றுமதி, 3.3 மில்லியன் கிலோ கிராமிலிருந்து 10.2 மில்லியன் கிலோ கிராமாக அதிகரித்திருந்தது. சீனாவுக்கான ஏற்றுமதியும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 47 சதவீதத்தால் உயர்ந்து 7.4 மில்லியன் கிலோ கிராமாக அதிகரித்திருந்தது. ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி 8.9 மில்லியன் கிலோ கிராமிலிருந்து 6.3 மில்லியன் கிலோ கிராமாகவும் அசர்பைஜானுக்கு 6.1 மில்லியன் கிலோ கிராமாகவும் லிபியாவுக்கு 5.6 மில்லியன் கிலோ கிராமாகவும் சிரியாவுக்கு 4.1 மில்லியன் கிலோ கிராமாகவும் ஏற்றுமதி அதிகரித்திருந்தது. தென் அமெரிக்காவின் பாரிய சந்தையாக விளங்கும் சிலி 3.5 மில்லியன் கிலோ கிராம் தேயிலையை இறக்குமதி செய்திருந்தது. ஜப்பானுக்கான தேயிலை ஏற்றுமதி 3.1 மில்லியன் கிலோ கிராமாகப் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



## அலியான்ஸ் லங்காவுடன் செலான் வங்கி கைகோர்ப்பு

**செலான் கடனட்டைதாரர்களுக்கு, அலியான்ஸ் லங்காவிடமிருந்து, கார்களுக்கு காப்புறுதி ப்ரீமியம்களை மேற்கொள்ளும் போது 18% விலைக்கழிவை பெற்றுக் கொள்ள முடியும்**

அலியான்ஸ் லங்காவுடன் செலான் வங்கி பிரத்தியேக பங்காண்மையை ஏற்படுத்தி உள்ளதாக அறிவித்துள்ளது. செலான் கடனட்டைதாரர்களுக்கு, அலியான்ஸ் லங்காவிடமிருந்து, கார்களுக்கு காப்புறுதி ப்ரீமியம்களை மேற்கொள்ளும் போது 18% விலைக்கழிவை பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், ஏனைய சகல வாகனங்களுக்குமான கொடுப்பனவுகளின் போதும் 20% சேமிப்பை பெற்றுக் கொள்ள முடியும். அவர்களுக்கு இந்த கொடுக்கல் வாங்கல்களை 12 மாதங்களுக்கு 0% வட்டியில்லாத தவணைமுறை மீளக் கொடுப்பனவு திட்டங்களாக மாற்றிக் கொள்ள முடியும்.

அலியான்ஸ் லங்காவில் புதிய மோட்டார் காப்புறுதித் திட்டங்களை கொள்வனவு செய்யும் போது, இந்த பிரத்தியேகமான விலைக்கழிவுகளுடனான ப்ரீமியம்கள் செலான் கடனட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகின்றது. அலியான்ஸ் மோட்டார் காப்புறுதி நிறுவனத்தில் செலான் கடனட்டையை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ரூ. 15,000க்கு அதிகமான கொடுக்கல் வாங்கல்கள், 2021 ஓகஸ்ட் மாதம் இறுதி வரை, 0% வட்டியில்லாத தவணைமுறை மீளக் கொடுப்பனவு திட்டத்துக்கு மாற்றிக் கொள்ளும் தகைமையைப் பெறும். ஆகக்கூடிய கொடுக்கல் வாங்கல் பெறுமதி வருடாந்தம் ரூ. 500,000 ஆகும்.

### கொவிட்-19 தொற்றுப் பரவலால்

## பாதிக்கப்பட்ட பழங்குடியினருக்கு SLT-MOBITEL உதவி

கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக அமல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்தின் மகாஓயா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொல்லெபெத்த கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் பழங்குடியினருக்கு, உலர் உணவுப் பொருட்கள் விநியோகத்தை SLT-MOBITEL அண்மையில் மேற்கொண்டிருந்தது.

அதன் பிரகாரம், நாளாந்த அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியாமல் நெருக்கடியான நிலைக்கு முகங்கொடுத்திருந்த சுமார் 285 குடும்பங்களுக்கு அத்தியாவசிய ஆகாரப் பொருட்கள் அடங்கலாக நிவாரணப் பொதிகள் 285 ஐ வழங்கியிருந்தது.

இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கு அம்பாறை மாவட்ட செயலகம், மகாஓயா பிரதேச செயலகம் ஆகிய அரச நிறுவனங்களின் ஆதரவு கிடைத்திருந்ததுடன், அம்பாறை மாவட்ட செயலாளர் டி.எம். எல்.பண்டாரநாயக்க, மகாஓயா மேலதிக பிரதேச செயலாளர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

பெருந்தொற்று நோய் பரவல் காரணமாக, நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையைத் தணிக்கும்




**பெருந்தொற்று நோய் பரவல் காரணமாக, நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையைத் தணிக்கும் வகையில், பல்வேறு செயற்றிட்டங்களை SLT-MOBITEL முன்னெடுத்துள்ளது**

வகையில், பல்வேறு செயற்றிட்டங்களை SLT-MOBITEL முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுகாதார சேவை ஊழியர்களுக்கு ஆதரவளிப்பது, சுகாதார சாதனங்களை அன்பளிப்பு செய்வது, பிரத்தியேக பாதுகாப்பு அங்கிகளை அன்பளிப்பு செய்வது, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு இணைப்புத் தீர்வுகள், அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது, அரச, தனியார் நிறுவனங்கள் தொடர்ச்சியாகத் தொடர்பாடல் இணைப்புகளைப் பேணுவதற்கு ஆதரவளிப்பது அடங்கலாக பல நடவடிக்கைகள் இவற்றில் அடங்குகின்றன.

### பிரதமர் மோடி, சரத்பவார் சந்திப்பு

# இந்திய அரசியலில் மாற்றமா?

### ஜனாதிபதி வேட்பாளராக சரத்பவாரா?

புதுடெல்லி

மாநிலங்களவை எம்.பியும் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான சரத் பவார் புதுடெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துள்ளார். இதனை பிரதமர் அலுவலகம் இரு தலைவர்களின் புகைப்படத்துடன் டுவிட்டரில் பதிவிட்டுள்ளது.

2022ஆம் ஆண்டில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக சரத்பவார் போட்டியிடக் கூடும்



என்ற யூகங்களுக்கு மத்தியில் இந்த சந்திப்பு நடந்துள்ளது. இருந்தாலும் இந்த யூகங்களை சரத்பவார் மறுத்துள்ளார்.


பிரதமர் மோடி - சரத்பவார் சந்திப்பு சுமார் 50 நிமிடங்கள் நடந்தது. இரு தலைவர்களும் புதிதாக அமைக்கப்பட்ட கூட்டுறவு அமைச்சு, விவசாயிகள் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விவாதித்ததாக கூறப்படுகிறது.

பிரதமர் மோடியுடனான சந்திப்பில் இருவருக்கும் இடையே அரசியல் குறித்து விவாதிக்கப்படவில்லை. இந்தியாவில் கொரோனா நிலைமை குறித்து விவாதித்ததாக சரத் பவார் தெரிவித்தார்.

### கொரோனாவாலும் ஸிகாவாலும்

## அவதியுறும் மக்கள்

திருவனந்தபுரம்:



ஒருபுறம் கொரோனா பாதிப்பும் மறுபுறம், ஸிகா வைரஸ் பாதிப்பும் தொடர்ந்து அதிகரித்து வருவது, கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதனால், தமிழ்நாடு, கேரள எல்லையில் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை மேலும் வலுவாகியுள்ளது.

இந்தியாவில் கடந்த சில மாதங்களாக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்த கொரோனா இரண்டாம் அலை, இப்போது தான் மெல்லக் கட்டுக்குள் வந்துள்ளது.

ஆனால், சில மாநிலங்களில் வைரஸ் பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால், மத்திய அரசாங்கம் கண்காணிப்புக் குழுக்களை நியமித்துள்ளன.

குறிப்பாக அண்டை மாநிலமான கேரளாவில் கொரோனா பாதிப்பு கணிசமாக அதிகரித்து வருகிறது. கேரளாவில் கடந்த இரண்டு வாரங்களிலும் அதிகரித்துள்ளது.

இதேவேளை,ஸிகா வைரஸ் பாதிப்பும் அதிகரித்து வருகிறது. இதுவரை மொத்தம் 35 பேருக்கு ஸிகா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## தலைமை செயலகமா, அறிவாலயமா?

### கருணாநிதி, ஸ்டாலினுடன் உதயநிதி படம் ஏன்?

சென்னை:

அமைச்சர்கள் அறையில் உதயநிதி படம் மாட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி 'இது தலைமை செயலகமா அறிவாலயமா' என முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் கேள்வி எழுப்பி உள்ளார்.

தி.மு.க அமைச்சர்கள், எம். எல்.ஏக்கள் முதலமைச்சருக்கு அடுத்தபடியாக உதயநிதிக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். சில அமைச்சர்கள் தலைமை செயலகத்தில் தங்கள் அறையில் கருணாநிதி, ஸ்டாலின் படத்துடன் உதயநிதி படத்தையும் மாட்டி வைத்துள்ளனர்.

சமீபத்தில் வழக்கறிஞர்கள் சட்டத்துறை அமைச்சர் ரகுபதியை அவரது அறையில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். இது தொடர்பான படம் சமூக வலைதளங்களில் வெளியானது. அந்த படத்தில் அமைச்சர் அறையில் ஈ.வெ.ரா., அண்ணாதுரை, கருணாநிதி, ஸ்டாலின் படங்களை தொடர்ந்து உதயநிதி படமும்



**தி.மு.க அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் முதலமைச்சருக்கு அடுத்தபடியாக உதயநிதிக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். தலைமை செயலகத்தில் தங்கள் அறையில் கருணாநிதி, ஸ்டாலின் படத்துடன் உதயநிதி படத்தையும் மாட்டி வைத்துள்ளனர்**

இருப்பது தெரிய வந்தது.

இந்த புகைப்படத்தை அ.தி. மு.க முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் 'டுவிட்டர்' பக்கத்தில் பகிர்ந்து 'தலைமை செயலகத்தில் அமைச்சர் அலுவலகத்தில் உதயநிதி படம். தலைமை செயலகமா; அறிவாலயமா?' என கேட்டுள்ளார்.

## ஆதரவாளர்கள் தப்பியோட்டம்

சென்னை:



பாலியல் தொல்லை வழக்கில் கைதாகி, சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிவசங்கர் பாபாவுக்கு ஆதரவாக செயற்பட்ட, ஐந்து ஆசிரியைகள் தலைமறைவாகி உள்ளனர்.

சென்னை, கேளம்பாக்கம் அருகே புதுப்பாக்கத்தில், சுஷில் ஹரி பாடசாலையை நடத்தி வருபவர் சிவசங்கர் பாபா. இவர், மாணவியருக்கு, பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து சி.பி.சி.ஐ.டி, பொலிஸார் டில்லியில் பதுங்கி இருந்த சிவசங்கர் பாபாவை கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர். பின், அவருக்கு ஆதரவாக செயல்பட்ட முன்னாள் மாணவியும், சீடருமான சுஷ்மிதா, 37, என்பவரும் கைது செய்யப்பட்டனர்.

### தமிழக மக்களுக்கு

## துரோகம் செய்வாரா மோடி?

மதுரை

மேகதாது அணை பிரச்சினையில் தமிழக மக்களின் விருப்பத்துக்கு மாறாக மோடி அரசாங்கம் செயல்படாதென நம்புவோம் என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. தெரிவித்தார்.

சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்றுமுன்தினம் மதுரை விமான நிலையம் வந்த விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் செய்தியாளர்களை சந்தித்தார்.

இந்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத்தை தமிழ்நாட்டின் சார்பில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையிலான குழு சந்தித்தது. தமிழக தரப்பு கருத்துகளைக் கேட்டுக்கொண்ட



மத்திய நீர்வளத்துறை அமைச்சர், தமிழகத்தின் ஒப்புதலின்றி மேகதாது அணை கட்டப்படாது என்று உறுதியளித்திருக்கிறார். தமிழக மக்களின் விருப்பத்துக்கு மாறாக மோடி அரசு செயற்படாது என்று நம்புவோம். நீட் தேர்வில் தமிழக மக்களின் விருப்பத்தை தெரிந்து கொள்வதற்காக நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளார் தமிழக முதலமைச்சர். அக்குழு விவரமான அறிக்கையை அளித்துள்ளது என்றார்.

## திகைக்க வைத்த பா.ஜ.க

சென்னை:

தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அண்ணாமலைக்கு, அக்கட்சியினர் கொடுத்த வரவேற்பும், அவரை வாழ்த்தி ஒட்டப்பட்ட பிரம்மாண்ட போஸ்டர்களும், திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க.), அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) உள்ளிட்ட திராவிட கட்சிகளை திகைக்க வைத்துள்ளன.

தமிழக பா.ஜ., தலைவராக, முன்னாள் ஐ.பி.எஸ்., அதிகாரியான அண்ணாமலையை, அக்கட்சியின் தேசிய தலைமை நியமித்துள்ளது. இந்த அறிவிப்பு வெளியானதும், பா.ஜ.,வினர், இனிப்பு வழங்கியும்,




பட்டாசுகள் வெடித்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்களில், அண்ணாமலையே மிகவும் இளையவர்.

சென்னை வந்த அண்ணாமலை, தி நகரில் உள்ள கட்சி அலுவலகமான கமலாலயத்தில், தமிழக பா.ஜ., தலைவராக பொறுப்பேற்றார்.

ஜேர்மனி

ஐரோப்பிய வெள்ளம்:

# மரணித்தோர் தொகை 180ஆக அதிகரிப்பு

ஜேர்மனி, பெல்ஜியம் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 180ஆக நேற்று முன்தினம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், ஜேர்மனியில் 156 பேர் உயிரிழந்ததுடன், பெல்ஜியத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.




இதேவேளை, நெதர்லாந்து, சுவிற்ஸர்லாந்து, ஒஸ்திரியா, லக்ஸம்பேர்க் உள்ளிட்ட நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், நூற்றுக்கணக்கானோரை இன்னும் காணவில்லை என்ற நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, வெள்ளம் வடிய ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா

## குரங்கு வைரஸால் ஒருவர் மரணம்



பயங்கரமான குரங்கு பி வைரஸால் தொற்றுக்குள்ளான நபரொருவர் இவ்வாண்டு மே மாதம் சீனாவில் மரணமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு மார்ச் மாதம் தனது சோதனை ஆராய்ச்சியொன்றுக்காக இரண்டு இறந்த குரங்குகளை குறித்த நபர் வெட்டிய பின்னரே தற்போது உயிரிழந்துள்ளார்.

குரங்குகளை வெட்டிய பின்னர் வாந்தி, காய்ச்சல் போன்ற குணங்குறிகளை குறித்த நபர் காட்டியிருந்தார்.



## காட்டுத்தீ

ஐக்கிய அமெரிக்காவின் ஒரிகன் மாநிலத்தில் வறண்ட, காற்று வானிலை காரணமாக பாரிய காட்டுத்தீ தொடர்ந்து பற்றி எரியும் என வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மாலி



துப்பாக்கிதாரிகளால்

## சீனப் பணியாளர்கள் கடத்தப்பட்டனர்

தென் மேற்கு மாலியில் உள்ள கட்டுமானத் தளம் ஒன்றில் இருந்து மூன்று சீனர்களையும் இரண்டு மூரித்தானியர்களையும் துப்பாக்கிதாரிகள் கடத்தியதாக, மாலியின் ஆயுதப் படைகள் தெரிவித்துள்ளன.


பேஸ்புக்கில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், தளத்துக்குள் நேற்று முன்தினம் நுழைந்த தாக்குதலாளிகள், ஐந்து பிக்கப் ட்ரக்குகளையும் பயணக்கைதிகளையும் கடத்திச் சென்றதாக ஆயுதப் படைகள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, சீன கட்டுமான நிறுவனமான கொவெக்குக்குச் சொந்தமான உபகரணங்களையும் தாக்குதலாளிகள் அழித்ததாக இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒஸ்திரியா

மாய சுகவீனத்தால்

## பாதிக்கப்பட்ட இராஜதந்திரிகள்



ஒஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் தமது இராஜதந்திரிகள், ஏனைய நிர்வாகப் பணியாளர்கள் பங்கெடுத்த தொடர்ச்சியான சுகாதாரச் சம்பவங்கள் குறித்து ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் விசாரிக்கின்றது.

மாயமான மூளை வியாதி தொடர்பான குணங்குறிகளை 20க்கும் மேற்பட்ட அதிகாரிகள் வெளிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது எவ்வாறு ஏற்பட்டது என விளக்கமளிக்கப்படாத போதும், பெரும்பாலும் மைக்ரோவேவ் கதிரியக்கத்தால் ஏற்பட்டிருக்கலாம் என ஐ. அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


> **இராஜதந்திரிகள், நிர்வாகப் பணியாளர் மாயமான மூளை வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது எவ்வாறு ஏற்பட்டது என விளக்கப்படவில்லை**

முதலில் 2016-17-ஆம் ஆண்டு காலப் பகுதியில் கியூபாவில் இது முதலில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

கியூபத் தலைநகர் ஹவானாவிலுள்ள ஐ. அமெரிக்க, கனேடிய இராஜதந்திரிகள் இவ்வாறான குணங்குறிகளை வெளிக்காட்டியிருந்தனர்.

ஐ. அமெரிக்கா

## அரங்கத்துக்கு வெளியே சூடு; பேஸ்போல் இரசிகர்கள் ஓட்டம்



ஐக்கிய அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பேஸ்போல் போட்டியொன்றிலிருந்து சில இரசிகர்களும் வீரர்களும் ஓடியுள்ளனர்.

அரங்கத்தை துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் அதிர வைத்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பின்னர் அரங்கத்துக்கு வெளியே சிலர் சுடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இச்சம்பவம் காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இருபதுக்கு – 20 தொடர் இன்று ஆரம்பிக்கிறது:

# தென்னாபிரிக்காவை வீழ்த்துமா அயர்லாந்து?

அயர்லாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரானது மலஹிட்டில் இலங்கை நேரப்படி இன்றிரவு 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் தென்னாபிரிக்காவுக்கு அயர்லாந்து சவாலை வழங்கிய நிலையில், இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில் கெவின் ஓ பிரயன், போல் ஸ்டேர்லிங், ஹரி டெக்டர் ஆகியோர் தொடர்ச்சியான பெறுபேறுகளை துடுப்பாட்டத்தில் வழங்குமிடத்தில் தென்னாபிரிக்காவுக்கு அயர்லாந்து அதிர்ச்சியை அளிக்கலாம்.



மறுபக்கமாக, இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரானது இன்னும் இரண்டு மாதங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் தென்னாபிரிக்கா தமது இறுதி 11 பேரை இறுதி செய்வதற்கான இறுதிச் சந்தர்ப்பமாக இத்தொடர் காணப்படுகின்றது.



ஒலிம்பிக் கிராமத்தில்

## தடகள வீரர்களுக்கு கொரோனா தொற்று

டோக்கியோ ஒலிம்பிக் தடகள வீரர்கள் கிராமத்தில் முதல் தடவையாக இரண்டு தடகள வீரர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு ஐந்து நாள்கள் முன்னதாக இக்கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

தொற்று ஏற்பட்ட இரண்டு தடகள வீரர்களும் ஒரே அணி மற்றும் விளையாட்டைச் சேர்ந்தவர்கள் என போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வணியின் ஏனைய அங்கத்தவர்கள், அவர்களின் அறைகளின் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஒலிம்பிக் கிராமம் தவிர்ந்த வேறொரு இடத்திலிருந்து மேலுமொரு தடகளவீரர் நேற்று கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.



## ஏ.சி மிலனில் இணைந்த ஜிரூட்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் முன்களவீரரான ஒலிவியர் ஜிரூட் இணைந்துள்ளார்.

எவ்வளவு தொகைக்கு ஏ.சி மிலனில் 34 வயதான ஜிரூட் இணைந்தார் என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இன்னொரு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலிருந்து கடந்த 2018ஆம் ஆண்டு செல்சியில் இணைந்த ஜிரூட், 119 போட்டிகளில் 39 கோல்களைப் பெற்றிருந்தார்.



## செல்சியில் இணையும் கேன்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்கள வீரரான ஹரி கேன், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சியில் இணையும் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனெனில், 27 வயதான கேன் செல்சிக்கு செல்லும்போது, செல்சியின் முன்களவீரர் தம்மி ஏப்ரஹாம் டொட்டென்ஹாமுக்குச் செல்வதோடு பணம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

எவ்வாறெனினும், இந்நகர்வுக்கு கேன் ஒத்துக் கொள்வாரா என்பது தெளிவில்லாமலுள்ளது.

ஏனெனில், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றிக்குச் செல்லும் வகையில் கேன் பயிற்சிக்கு சமூகமளிக்க மாட்டார் எனக் கூறப்படுகிறது.

## இன்டர் மிலனில் தொடரும் லுக்காக்கு?



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மிலனின் முன்கள வீரரான றொமெலு லுக்காக்கு இப்பருவகாலத்தில் இன்டர் மிலனை விட்டு வெளியேற மாட்டார் என இன்டர் மிலன் இரசிகர்களுக்கு லுக்காக்குவின் முகவர் பெடெரிக்கோ பஸ்டொரெல்லோ உறுதியளித்துள்ளார்.

இன்டர் மிலனில் நிதிப் பிரச்சினைகள் நிலவுகையிலேயே பஸ்டொரெல்லோ மேற்படி உறுதியை அளித்துள்ளார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டிலிருந்து 2019ஆம் ஆண்டில் இன்டர் மிலனில் இணைந்த 28 வயதான லுக்காக்கு, 72 போட்டிகளில் 47 கோல்களைப் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 19 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.